Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 14 புதன்கிழமை (30-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 236

# மன்னார் கப்பல் சேவைக்கு புலிகளின் பதில் எதிர்பார்ப்பு!

## ஜ.நா. அகதிகள் தூதரக அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

" மன்னாரில் தற்சமயம் சிக்கியுள்ள வட பகுதி அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்வதற்கான கப்பல்சேவையை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் சாதக மான பதிலை எதிர்பார்த்திருக்கின்றோம். "

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இலங்கை அலுவலக தலைமை அதிகாரி போசாக் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குக் கடலில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் முடிவு செய்ததை அடுத்து வடபகுதிக்கான பயணிகள் கப்பல் சேவை உட்பட அனைத்து கப்பல் சேவைகளும் கடந்த மூன்று வாரங்களாக தடைப் பட்டிருந்தது தெரிந்ததே.

மன்னாரில் சிக்குண்டிருக் கும் பல்லாயிரக்கணக்கான வடபகுதி அகதிகளைவடக்கே கொண்டு போய்ச் சேர்ப்பதற் கான பயணிகள் கப்பல் சேவையை நடத்தும் பொறுப்பு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திடம் ஒப் படைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சேவையை நடத்து வது குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் புலிகளு டன் தொடர்பு கொண்டு வருகின்றது.

அது குறித்து தூதரகத்தின் தலைமை அதிகாரி போசாக் மேலும் தெரிவித்ததாவது:-

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வேலைகளுக்கு கிழவிகள் உதவுகின்றனர்!

### படையினருக்குத் தகவலாம்

கொழும்பு, ஜூலை 30

விடுதலைப் புலிகள் உதவி களைப் பெறுவதற்கு தமிழ்க் கிழவிகளைப் பயன்படுத்து கிறார்கள் என பாதுகாப்புத் துறையினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாம்!

புலிகள் தமது நடவடிக் கைகளை மேற்கொள்வதற் குத் தேவையான தகவல் களைத் திரட்ட, தகவல் களைக் கொண்டு செல்ல, சாட்பாடுகளைப் பெற இது வரை சிறுவர்களைப் பயன் படுத்தி வந்ததாகவும் —

தற்போது புலிகளுக்காகப் பணிபுரியும் இவ்வாறான சிறுவர்கள் வீதிவழியாகச் செல்லும்போது அவர்களுடன் வயது வந்த தமிழ் கிழவி களும் செல்வதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் 3 அதிபர்கள் கைது!

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பிரதி அதிபர் குண சீலன், சித்திவிநாயகர் பாட சாலை அதிபர் கந்தசாமி, புலோலி மெதடிஸ் மிஷன் பாடசாலை அதிபர் எஸ். இரகுநாதன், சரவெட்டியைச் சேர்ந்த கூட்டுறவுத் தலை மைப் பரிசோதகர் கந்தசாமி ஆகியோர் கடந்த வெள்ளிக் கிழமை படையினரால் விசா ரணைக்கு அழைத்துச் செல் லப்பட்டனர்; அவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்:

காயமடைந்த புலிகளை கவனித்துக் கொள்வதற்கு பாடசாலைப்பிள்ளை களைப் பயன்படுத்தியமை தொடர்பாக விசாரணை நடத்திய இரகசியப் பொலி ஸார் —

கடந்த ஜூலை 13 ஆம் திகதிக்கும் 19 ஆம் திகதிக் கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற இத்தகைய நட வடிக்கைகளுக்கும் வடமராட் சியில் மூன்று பாடசாலை அதிபர்கள் மற்றும் கூட்டுற வுப் பரிசோதகர் ஆகியோருக் கும் தொடர்பு இருப்பதை கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்துள்ளனர் என்று கொழும்பு செய்தி வட்டாரங் கள் தகவல் வெளியிட்டன.

(உ-5-100)

## வடக்குக்கு மா கப்பல்

கொழும்பு, ஜூலை 30

யாழ். குடாநாட்டிற்கு கோதுமை மாவை ஏற்றிக் கொண்டு 'வெஸ்கன்ரி' என் னும் கப்பல் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட் டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் மேலதிக செயலாளர் எம். ஐ. ராபீக் தெரிவித்தார்.

(உ-4)

## மாணவரை அழைத்து வர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 30

திருகோணமலையில் நடந்த மாகாண தமிழ்த் தினப் போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி ஆகியவற்றில் பங்கு பற்றச் சென்று, திரும்பி வர முடியாமல் அங்கு சிக்குப்பட் டிருக்கும் மாணவர்களில் 9 பேர் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர் தரப்) பரீட்சைக் குத் தோற்றுபவர்கள் என்று கூறப்படுகின்றது.

அவர்களை விமானம் மூலம் இன்று அல்லது நாளை யாழ். அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. (உ-3-150)

## மஹ்ரூப் கொலை சந்தேசத்தில் 4 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 30

திருகோணமலை நாடாளு மன்ற உறுப்பினர் மஹ்ரூப் படுகொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் நால்வரைத் திரு கோணமலைப் பாதுகாப்பு இணைப்புப் பிரிவு கைதுசெய் திருப்பதாகப் பாதுகாப்பு வட் டாரங்கள் அறிவித்தன.

முக்கிய சந்தேக நபர் விசேட பொலீஸ் குழு ஒன்றி னால் கைது செய்யப்பட்ட தாகவும் —

ஏனைய மூவரும் நிலா வெளியில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் —

மேலும் அறிவிக்கப்பட்டது. மேலும் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காகச் சுற்றி வளைப்பு தேடுதல்கள் நடத் தப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (உ-4)

## லொறி சடத்தல்

பொத்துவில் பகுதியில் சாரதி, அவரின் உதவியாளர் மற்றும் ஒருவருமாக மூவரு டன் சென்று கொண்டிருந்த லொறி ஒன்று நேற்று கடத் தப்பட்டது.

சாரதியும் அவரின் உதவி யாளரும் இன்னும் விடுவிக் கப்படவில்லை. மற்றைய நபர் விடுவிக்கப்பட்டார்.

(உ-10-21)

## மின் மாற்றி தகர்ப்பு

மட்டக்களப்பு, ஜூலை 30

மட்டக்களப்பு — கல்முனை வீதியில் பெரிய நீலாவணை என்ற இடத்தில் உள்ள மின் மாற்றி நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் தகர்க்கப்பட்டது: இதனால் சுமார் 250 குடும்பங்களுக் கான மின் விநியோகம் பாதிக் கப்பட்டுள்ளது:

(உ-10-21)

## விமான சேவை இன்று ஆரம்பம்

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான 'லயன் ஏயர்' நிறுவனத்தின் பயணிகள் சேவை இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படுகின்றது என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இன்று முதல் பலாலி-இரத்மலானை இடையே தினசரி இரண்டு பயணிகள் விமான சேவை நடை பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி முதல் இச்சேவை தடைப்பட்டிருந்தது தெரிந்ததே.

## வாகரையில் தாக்குதல் முறியடிப்புஎன அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

மட்டக்களப்பு மாவட்டம் வாகரையில் மயிலங்குறிச்சி என்ற இடத்தில் உள்ள வீதித்தடையில் படையினர் மீது நேற்றுப் பிற்பகல் புலி கள் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

வாகரையில் இருந்து பஸ் ஒன்றில் பொதுமக்கள் போன்று வந்த விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இராணுவ வட் டாரங்கள் தெரிவித்தன;

இராணுவ—பொலீஸ் தரப் பில் 2 பேர் இந்த மோதலின் போது காயமடைந்தார் கள்:

விடுதலைப் புலிகள் தரப் பில் ஒருவர் கொல்லப்பட்ட துடன் மேலும் 2 பேர் காய மடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரி வித்தன.

(உ-4)

## 10 ஆயிரம் துருப்புகள் தொடர்ந்துதலைமறைவு

கொழும்பு, ஜூலை 30

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள் மீள இணைவதற்கு அண்மையில் வழங்கப்பட்ட கால அவகா சத்தின் போது 4 ஆயிரத்து 206 பேர் மீள இணைந்தனர் என்றும்—

தலைமறைவான மேலும் பத்தாயிரம் பேர் தொடர்ந் தும் தலைமறைவாகி இருந்து வருகின்றனர் என்றும்—

அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன:

இவ்வாறு தப்பியோடிய சிலர் அண்மையில் கைது செய்யப்பட்டு இராணுவ நீதி மன்றத்தில் நிறுத்தப்பட் டதை அடுத்தே தப்பியோடி யோரில் கணிசமானோர் சேவைக்குத் திரும்பியதாகக் கூறப்படுகின்றது. (உ-10)

## பத்தரமுல்லவிகாரையில் குண்டு வெடித்தது!

### பிக்கு படுகாயமுற்றார்

கொழும்பு,ஜூலை 30

கொழும்பு பத்தரமுல்ல பகுதியில் உள்ள விகாரை ஒன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டு வெடிப் பில் அக்குரத்த ஆரிய ஸ்ரீ தேரர் என்ற பிக்கு படுகாய மடைந்தார்.

பிக்குவின் அறையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த அல்லது அறைக்குள் வீசப் பட்ட குண்டு ஒன்றே வெடித் திருக்கலாம் எனக் கருதப்படு கின்றது.

அரசியல் கட்சியை சேர்ந்த சிலர் இந்த விகாரையில் கூட் டங்களை நடத்தி வந்ததாக வும்—

அதனை ஆட்சேபித்து வந் ததால் இந்தப் பிக்கு மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக் கலாம் எனக் கருதப்படுவதா கவும்—

கொழும்பு செய்தி வட்டா ரங்கள் குறிப்பிட்டன.

(உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கணேசன் செல்லம்மா

காரைநகர், பெரியமணலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல: 204, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் செல்லம்மா 28-7-97 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசனின் அன்பு மனைவியும், பராசக்தி, பரமலிங்கம், பழனிலிங்கம், செல்வலிங்கம் (வர்த்தகர்கள் யாழ்ப்பாணம்), சிவலிங்கம் (ஆசிரியர், நம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா), புஸ்பலிங்கம் (பிரான்ஸ்), அருளலிங்கம் (வர்த்தகர்—யாழ்ப்பாணம்), ஞானசோதிலிங்கம் (மருத்துவபீட மாணவன் யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவஞானம் (வர்த்தகர் மானிப்பாய்), அமிர்தவல்லி, மஞ்சுளாதேவி, விஜயராணி, சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகறஞ்சினி, நாகரூபி, நாகநந்தினி, மயூரதன், பிரதீபன், சுவர்னா, இழம்போதரன், தேவகஜன், பிரியதர்ஷினி, யோகவதனி, பிரணவன், மதுரகஜன், அம்பதீசன ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், பாலசுப்பிரமணியம் (வர்த்தகர்), காலஞ்சென்ற கைலாசபிள்ளை (முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-7-97 புதன் கிழமை நடைபெற்று பூதவுடல் காலை 9.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பரமலிங்கம்
(மகன்)

இல: 204, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(48659)

## சோமசுந்தரம் கந்தசாமி

புத்தூரைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கந்தசாமி 29-7-97 இல் காலமானார். இவர் புத்தூர் கிழக்கு காலஞ் சென்ற சோமசுந்தரம், இலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், விஸ்வலிங்கம் (அதிபர், அத்தியார் இந்துக் கல்லூரி) தங்கம்மா, குமாரவேலு (கூட்டுறவு தலைமையக பரிசோதகர்), குணரத்தினம் (பொது முகாமையாளர், பனங்காமம் பற்று ப. நோ. கூ. சங்கம்) தட்சணாமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசலட்சுமி, குமாரசாமி (வ. பி. போக்கு வரத்துசாலை), கலமாதேவி, கமலகுமாரி தயாநிதி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-7-97 இன்று புதன்கிழமை காலை 10-30 மணியளவில் புன்னாலைக் கட்டுவனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்
சோ குமாரவேலு
(சகோதரன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சந்தி.
(48670)

## திருமதி சத்தீஸ்வரி கனகரெத்தினம்

கைதடி கிழக்கு திருமதி சத்தீஸ்வரி கனகரெத்தினம் 26-07-97 இல் காலமானார்.

இவர் சின்னையா கனகரெத்தினத்தின் (உரிமையாளர், கதிர்வேலவன் அரிசி ஆலை, கைதடி) அன்பு மனைவியும், ஹம்சிகா (மாணவி, சென் ஜோன் பொஸ்கோ), சயந்தன், காலஞ்சென்ற ஜசிந்தன், மற்றும் கதிர்செல்வன், செல்வக்கதிர், எழில்வேந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 30-07-97 புதன்கிழமை காலை 11-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊத்தல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. கனகரெத்தினம்
(கதிர்வேலவன் அரிசி ஆலை, கைதடி)

கைதடி கிழக்கு,
கைதடி.
(48671)

## பெஞ்ஜமீன் இம்மானுவேல் அன்ரன்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர் பெஞ்ஜமீன் இம்மானுவேல் அன்ரன் (29-07-97) இல் காலமானார்.

இவர் இரத்தினாவதியின் அன்புக் கணவரும், பிலிப் ஜெயக்குமார் (கனடா), பவானிசுரேஸ் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), விஜயக்குமார் (ஜேர்மனி), பெஞ்ஜமீன் மோகன் (டோகா), மரினாவதனி (கனடா), சந்திரகுமார் பிரான்ஸிஸ் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும் அனெட்ரா, சுரேஸ்குலராஜசிங்கம், ரஞ்சி, நிமலினி, ரவி சவுந்தராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதுஷா, பிரவீன், கன்னிஷா, திசோன், பெஞ்ஜமீன், ஜேசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30-07-1997) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு (புதிய நேரம்) அன்னாரது வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வாறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. C. பிரான்ஸிஸ்
(சந்திரன்)
(மகன்)

கல்லூரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.
(48668)

## கல்வி ஊழியருக்கு முற்பணம்

கப்பல் வசதியின்றி திருகோணமலையில் நிர்க்கதி நிலையில் உள்ள யாழ். கல்வித்திணைக்கள ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவை மாகாண கல்வி அமைச்சு முற்பணமாக வழங்கியுள்ளது.

அங்கு தங்கியுள்ளவர்கள் தினமும் மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் கையெழுத்து இடவும் மாகாணக் கல்வியமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. (உ-150-3)

## ஆசிரியர் பரீட்சை நிலைய மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆசிரியர் சேவை வகுப்பு 1க்கு தரம் உயர்த்துவதற்கான பரீட்சைக்கு வெளி மாவட்டங்களில் பரீட்சை நிலையம் ஒதுக்கப்பட்டவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளை யாழ். வலயம் 1 கல்விப் பணிமனையில் எதிர்வரும் வெள்ளியன்று சமர்ப்பித்து பரீட்சை நிலையத்தினை மாற்றிக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்திய பிரதியைச் சமர்ப்பித்து, அனுமதி அட்டையை சேகரித்துக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவு தூபியில் மலராஞ்சலி

திருநெல்வேலி, ஜூலை 30

பண்டா செல்வா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை யாழ் முற்றவெளியில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியில் மலரஞ்சலியும், மௌன பிரார்த்தனையும் நடத்தப்பட்டன.

தந்தை செல்வா நினைவுக் குழுவினர்களும், தந்தை செல்வாவின் அபிமானிகள் சிலரும் இதில் கலந்து கொண்டனர். (இ-135)

## பரீட்சை எழுதும் மாணவருக்கு மண்எண்ணெய்

வட்டுக்கோட்டை ஜூலை 30

ஜி. சீ. ஈ உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் கட்டுப்பாட்டு விலையில் மண் எண்ணெயை விநியோகம் செய்து வருகின்றது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தங்களின் பரீட்சை அனுமதி அட்டையையும் உணவுப் பங்கீட்டு அட்டையையும் செயலகத்தில் சமர்ப்பித்து மண் எண்ணெய் பெறுவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு மாணவருக்கும் 5 லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்படுகின்றது.

(இ-12)


**BOSCO INSTITUTE**

25, நக்கா றோட்.

விசேட சிங்கள வகுப்பு

செல்வி தர்சினி

பிரிவு II

ஆரம்பம்: 01-08-97

Mon, Fri. 3-4

ஆண்டு 6-O/L வரையான

புதிய வகுப்புக்கள்

ஆரம்பம்: 31-07-97

பி. ப. 3 - மணி.

(48662)



## எமது வீடியோ டிஸ்க் (CD) வெளியீடுகள்

| | |
|---|---|
| ★ அருணாச்சலம் | ★ காதல் கோட்டை |
| ★ மேட்டுக்குடி | ★ காதல் தேசம் |
| ★ கோகுலத்தில் சீதை | ★ மன்னன் |
| ★ தளபதி | ★ 16 வயதினிலே |
| ★ அடிமைப்பெண் (M.G.R.) | ★ ஆசை |
| ★ சிந்து பைரவி | ★ சலங்கை ஒலி |
| ★ மணிரெத்தினம் | ★ ராஜ முத்திரை |
| ★ ரோஜா | |
| ★ ரஜினியின் புதிய பழைய பாடல்கள் | |

எமது அடுத்த வெளியீடு...

★ நந்தினி

**சுப்பஸோ வீடியோ**

யாழ்ப்பாணம்.

(சி/1223)


## யாழ்.மத்திய கல்லூரி 181 ஆவது நிறுவுநர் நாள் விழா

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (01-08-1997) நடைபெறவுள்ள இவ்விழாவில் தபால் தலை, முதல் நாள் உறை, 180 ஆவது ஆண்டு நிறைவு மலர் என்பன வெளியிடப்படும்.

பிரதம விருந்தினர்: பேராசிரியர் வ. நவரட்ணராஜா.

கௌரவ விருந்தினர்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ் பல்கலைக் கழகம்)

சிறப்பு விருந்தினர்: திரு. சு. இரத்தினராசா (கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

உப செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

## வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி நகரசபை செயலாளர்

உயர்திரு. சி. நடராசா அவர்கள்

இலங்கை நிர்வாக சேவைக்கு திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதனை மனதார வாழ்த்துகின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
நகரசபை, சாவகச்சேரி.

(சி/1222)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளர்:

திரு. நா. வி. மு. நவரெத்தினம்

அவர்களின் தந்தையார்

அமரர் வினாசித்தம்பி முருகேசு

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விரிவுரையாளர்களும்,
போதனாசிரியர்களும்.

இசை நடனத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்.
(47354)

# மரண அறிவித்தல்

## முத்துக்குமாரு ஜெகநாதராஜா

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு ஜெகநாதராஜா 29-07-97 இல் காலமானார்.

இவர் இரத்தினாவதியின் அன்புக் கணவரும், சாந்தினியின் (வவுனியா) அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30-07-97) புதன் கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொட்டடி மெதடிஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஜெ. இரத்தினாவதி
(மனைவி)

335, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(48672)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய ஐரோப்பிய நாடுகளில் மோசமான வெள்ளப் பெருக்கு

## ஜேர்மனி, போலந்தில் ஆயிரக்கணக்கானோர் வீடு இழந்தனர்

பொன் ஜூலை 30

ஹுவர் நதி பெருக்கெடுத்தோடுவதால் மத்திய ஐரோப்பிய நாடுகளில் சமீபகால வரலாறு காணாத பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு ஜேர்மனியும் போலந்துமே வெள்ளத்தினால் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு நாடுகளிலும் வெள்ளப் பெருக்குக்கு எதிராக அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்மட்டம் மிக உயர்ந்துள்ள ஹுவர் நதியின் அணைகள் உடைந்து விடாமல் இருக்க அவசரகால பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நூற்றாண்டிலேயே ஐரோப்பாவின் மத்திய பகுதியைத் தாக்கியுள்ள மிக மோசமான வெள்ளப்பெருக்கின் 3 ஆவது வாரமான இவ் வாரத்தில் ஜேர்மனி-போலந்து எல்லையின் இருமருங்கிலும் மிகப்பெரிய நிலப்பரப்பு நீரில் மூழ்கியுள்ளது,

வெள்ளத்தினால் நீர் ஊறியுள்ள நீர்த்தடுப்புச் சுவர்கள் உடைந்தால் தமது அன்றாட ஜீவனத்தை இழந்து விடும் அச்சத்துக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பி. பி. சி. தெரிவித்தது.

பல்லாயிரக்கணக்கானவர்கள் ஏற்கனவே வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர் மேலும் பலர் கட்டாயமாக வெளியேற்றப்படவிருக்கின்றனர்.

வடக்கு நோக்கிப்பாய்ந்து கொண்டிருக்கும் வெள்ளம் பல நகரங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. (இ-3)

# புறூண்டி பிரச்சினையை தீர்க்க முயற்சி

புறூண்டி, ஜூலை 30

மத்திய ஆபிரிக்காவுக்கான ஐ.நா. தூதர் முகமட் சருனூன் புறூண்டியில் நிலவி வரும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு விரைவாகவே தீர்வு ஒன்று காணப்படும் எனத் தாம் நம்புவதாக சருனூன் நம்பிக்கை வெளியிட்டார். (இ-3)

உலக அரங்கில்

# அமெரிக்க கோடீஸ்வரருடனான கட்டட ஒப்பந்தம் நிறுத்தம்

## இஸ்ரேல் அரசு நடவடிக்கை

ஜெரூஸலம், ஜூலை 30

ஜெரூஸலத்துக்கு அருகே பலஸ்தீனர்கள் வாழும் பகுதி ஒன்றில் யூதர்களுக்கான புதிய குடியிருப்புக்களைக் கட்டுவதற்காக அமெரிக்க கோடீஸ்வரர் கோபீன் மொஸ்சோஸுக்கு வழங்கிய கட்டட பணியை இஸ்ரேலிய அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

அதிக வீடுகள் கட்டும் இந்தத் திட்டத்துக்கு எதிராக ஜெரூஸலம் நகர மன்றத்தின் இரு உறுப்பினர்கள் மேன்முறையீடு செய்திருப்பதைத் தொடர்ந்தே இத் திட்டம் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஜெரூஸலத்தில் இதுபோன்று கட்டடங்கள் கட்டப்படுவது சமாதானத்தை மீறுவதாக அமைகின்றது என்று பலஸ்தீனர்கள் கூறுகின்றனர். (இ-3)


# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

க. ஞானசோதிலிங்கத்தின் பாசமிகு தாயார்

## திருமதி கணேசன் செல்லம்மா

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

17 ஆம் அணி மாணவர்கள்
மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.
(48650)



சக்திவாய்ந்த கச்சிதமான
நம்பகரமான

# "டென்யோ" ஜெனரேட்டர்




கையிருப்பிலிருந்து மாதிரிகள் கிடைக்கும்

- ★ 6. 5 கேவிஏ ஓசை குறைந்த (SOUND PROOF) டீசல், 3 பேஸ், சுயமாக இயங்கக் கூடியது ரூபா 2,75, 000/-
- ★ 2. 3, 2. 8, 3. 3, 3, 9 சிங்கிள் பேஸ் டீசல் என்ஜின் சுயமாக இயங்கக்கூடியது — ரூபா 75, 000/- மேல்
- ★ 2 கேவிஏ பெற்றோல் ரூபா 45, 000-/

கிடைக்குமிடம்:

**N. M. L. TRADERS**

என். எம். எல். டிரேடர்ஸ்

85, கொட்டா வீதி, பொரல்ல,
கொழும்பு - 8

தொலைபேசி எண்: 693617 பக்ஸ்: 500737

(சி/842)


# வேலை நிறுத்தம்: எதிராக நீதிமன்று தீர்ப்பு

திருவனந்தபுரம், ஜூலை 30

பொது வேலை நிறுத்தத்துக்கு எதிராக இந்திய மாநிலமான கேரளத்தில் உயர் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கி உள்ளது.

இது தொடர்பானவழக்கை ஒன்பது வர்த்தக நிறுவனங்களும் 2 தனியாரும் அரசியல் கட்சிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்தனர்,

பொது வேலை நிறுத்தம் என்ற போர்வையில் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளையும் வர்த்தகத்தையும் முடக்குவதற்கு எந்த அரசியல் கட்சிக்கும் தனியாருக்கும் உரிமை இல்லை என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

வேலை நிறுத்தத்தின் போது ஏற்படும் சொத்து இழப்புகளுக்கு கட்சிகள் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ)

# பெற்றோல் கடத்தல்

சென்னை, ஜூலை 30

தி. மு. க. அரசின் ஆதரவுடன் புலிகளுக்குப் பெற்றோல் மற்றும் டீஸல் கடத்தப்படுவதாக தமிழ் நாடு முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றஞ் சாட்டியுள்ளார்.

கடத்தல் கும்பல்களை தி. மு. க. அரசு அனுமதித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# 50 லட்சம் பேர் பட்டினி நிலை!

## வடகொரியாவில் பஞ்சம்

வட கொரியாவில் சுமார் 50 லட்சம் மக்கள் பட்டினியால் கஷ்டப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட பஞ்ச நிலைமை வட கொரியாவிலும் உருவாகியிருப்பதாக நிவாரண உதவி வழங்கும் நாடுகள் தெரிவிக்கின்றன.

வடகொரியாவில் போசாக்கின்மை பரந்துகாணப்படுவதாக ஹங்கேரி உதவி நிறுவனம் ஒன்றின் அதிகாரி தெரிவித்தார்.

உடனடியாக வெளிநாட்டு உதவி கிடைக்காவிட்டால் அநேகம் பேர் மரணமடைவார்கள் என்றும் அவர் எச்சரித்தார்.

வட கொரியாவில் வெப்பக் காற்று வீசியது. அதைத் தொடர்ந்து வரட்சி ஏற்பட்டது.

இதனால் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் உணவு நிலைவரம் மோசமடைந்தது.

உலக உணவுத் திட்டத்தின் வேண்டுகோளை ஏற்று அமெரிக்காவும், தென் கொரியாவும் 6 கோடி 80 லட்சம் டொலர் பெறுமதியான உணவுப் பொருள்களை வட கொரியாவுக்கு வழங்க உறுதி அளித்துள்ளன. (இ-3)

# காபூலில் சண்டை நீடிக்கின்றது

காபூல் ஜூலை 30

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலுக்கு அருகே தலிபான் மக்கள் படையினருக்கும், எதிர்த்தரப்பு படைகளுக்கும் இடையே கடுமையான சண்டை தொடர்ந்து நடைபெறுவதாக ஆப்கான் செய்திகள் தெரிவிக்கின்றன.

காபூல் நகரத்துக்கு உள்ளேயும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தலிபான் படையினர் தமது நிலைகளை வலுப்படுத்தி வருகின்றனர். (இ-3)

# கராச்சியில் வன்முறை சம்பவங்கள் நீடிப்பு

## நால்வர் கொல்லப்பட்டனர்

பாகிஸ்தானின் வன்முறை தலைவிரித்தாடும் கராச்சியில் நேற்று முன்தினம் நடந்த வெவ்வேறான சம்பவங்களில் குறைந்தது நால்வர் இறந்தனர்.

கடத்திச் செல்லப்பட்ட இளைஞன் ஒருவரின் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த உடல் கிழக்கு மாகாணமான ஹொறாங்கியில் கண்டெடுக்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

கிழக்கு லாந்தி மாநிலத்தில் ஒருவர் தமது வீட்டின் முன்வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற்கு ஓராங்கி மாவட்டத்தில் இருவர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஜனவரி மாதம் முதல் கராச்சி நகரில் சுமார் 400 பேர் கொல்லப்பட்டார்கள்.

பல அரசியல் தொண்டர்களும், 15 பொலீஸாரும் இறந்தவர்களில் அடங்குவர். (இ-3)

# கம்போடியப் பிரச்சினையில் ஆசியான் மத்தியஸ்த முயற்சி!

## கோலாம்பூரில் நடந்த கூட்டத்தில் இணக்கம்

கோலாலம்பூர், ஜூலை 30

கம்போடியாவில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக தன்னுடைய மத்தியஸ்த முயற்சிகளை ஆசியான் அமைப்பு மீண்டும் விரைவில் ஆரம்பிக்கும்.

இது தொடர்பான உடன்பாடு ஒன்று ஆசியான் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூரில் நடந்த ஆசியானின் 30 ஆவது ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்த உடன்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்தன.

கம்போடியாவின் உள்நாட்டுப் போரை முடித்து வைத்த 1991 ஆம் வருடத்திய அமைதி உடன்படிக்கை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடலின் ஆல்பிரைட் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

மனித உரிமைகள் பிரச்சினை, போதை மருந்து வியாபாரம், உள்ளூர் செலாவணியில் அண்மையில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் போன்ற பிரச்சினைகளும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

காலை தொடக்கம் மாலை வரை பிள்ளையை கவனிக்கக் கூடிய நடுத்தர வயதுப் பெண் தேவை. நேரில் வரவும். 52, மருதடி வீதி, நல்லூர்.
(48653)

### மணமகன் தேவை

லண்டனில் நிரந்தர குடியியல் உரிமையுள்ள Cima எக்கவுண்டன் ''பைனல்'' முடித்த புநர்பூசம் 4 ஆம் பாதம் 21-6-66 மீனலக்கினம் சைவபோசன பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: மே/பா நாதன் வர்த்தக நிலையம், கோப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தி, (மணமகன் லீவில் வந்துள்ளார்).
[48634]

28-10-63 மிதுனலக்கினம் பூரட்டாதி, 1 ஆம் பாதம் கொழும்பில் B.Sc. எலக்ரிக் என்ஜினியராக வேலை செய்யும் மணமகனுக்கு கொழும்பில் வீட்டுடன் படித்த அழகான மணமகள் தேவை. தொடர்பு: மே/பா நாதன் வர்த்தக நிலையம்.
[48635]

சிங்கப்பூரில் நிரந்தர குடியியல் உரிமையுள்ள மிருகசீரிடம் 4 ஆம் பாதம் 1-6-65 சிங்கலக்கினத்து செவ்வாய் உள்ள B.Sc. சிவில் என்ஜினியருக்கு எக்கவுண்டன்,என்ஜினியர் மணமகள் தேவை. தொடர்பு: மே/பா நாதன் வர்த்தக நிலையம், கோப்பாய்வீதி, உரும்பிராய்ச்சந்தி, விவாகப்பொருத்துநர் யாழ். மாவட்டத்தின் முன்னோடியான ப. முருகையா.
[48636]

### தவறிவிட்டது

பாலசுப்பிரமணியம் யோசேஸ்வரன் (தலங்காவில் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி) எனும் பெயருடன் கூடிய விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தலங்காவில் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி.
[48641]

### ஆங்கிலம், கணிதம்

விசேடமாக (விடுதலைக்குள்) ஆண்டு 6 தொடக்கம் O/L வரை விசேட பெறுபேறடைய வாரம் 5 மணித்தியாலம் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.
(48630)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும் தொடர்பு: Luky farm, sales centre Palaly Road Thirunelvely
(48653)

### பெண் விற்பனையாளர் தேவை

யாழ். நகருக்கு அண்மையிலுள்ள சிறிய புத்தக நிலையமொன்றுக்கு, பெண் விற்பனையாளர் தேவை. கல்விநிலை, குடும்ப அங்கத்தவர் விவரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும்.

இல. 643,
மே/பா 'உதயன்'
யாழ்ப்பாணம்.
(48652)

---

## திருமறைக் கலாமன்றம்
## கருத்தரங்கு

பொருள்: உறவும் பிரிவும் சுமை

கருத்துரை வழங்குவோர்:
திரு. க. வி, கந்தவேள்
Dr. C. S. நச்சினார்க்கினியன்

காலம்: இன்று 30 - 07 - 97 (புதன்)
மாலை 4. 30 மணி [ புதியநேரம் ]

இடம்: மன்ற கேட்போர் கூடம்.

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1218)

---

## வாழ்த்துகின்றோம்

### யா / தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 18 வருட காலத்தில், 11 வருடகாலமாக அதிபராகச் சிறப்புடன் பாடசாலை நிர்வாகத்தை நடத்தியது மட்டுமன்றி, இக்கட்டான கால கட்டத்திலும் அதனைத் தொடர்ந்து இயக்கி வந்த எமது

பேராசான்
**அதிபர் சி. செல்வநாயகம்**

அவர்கள் 25 - 07 - 1997 அன்று தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறுவதையிட்டு அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், நலன் விரும்பிகள்,
ஆசிரியர்கள்.
(47352)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



முல்லைத்தீவுபிர தேச முன்னாள் கல்விப் பணிப்பாளர் காலஞ்சென்ற திரு V. K. நல்லையா அவர்களின் அன்பு மனைவி

### திருமதி அவையாம்பிகை நல்லையா

மலர்வு: **11 — 12 — 1926**
உதிர்வு: **01 — 07 — 1997**

01 - 07 - 1997 ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் ஈமக்கிரியையின் போது நேரில் வந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும், கடிதம் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், அன்றைய தினம் சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய எல்லோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு 31 - 07 - 1997 நாளை வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், தொடர்ந்து நடைபெற இருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப்பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

குடும்பத்தினர்.

இந்து பாடசாலை வீதி,
வல்வெட்டி.
(48622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நிகழ்வு

இடம் யாழ். வைத்தீஸ்வரக்கல்லூரி
நாள்: 30 - 07 - 1997 புதன்கிழமை
நேரம்: முற்பகல் 11-30 மணி
தலைவர்: அதிபர் T, சந்தோசம் அவர்கள்

மாணவர் பஜனை

சிறப்புரை: இலங்கையில் ஸ்ரீராமகிருஷ்ண இயக்கமும் வைத்தீஸ்வரக் கல்லூரியும்
சுவாமி சித்ரூபானந்தா
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

நூல் அறிமுகம்: இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்
- பெ. சு. மணி

நூல் வெளியிடு: இராமகிருஷ்ணா மிஷன்
கொழும்பு - 06

நன்றியுரை

இந்து மாணவர் மன்றம்
யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி

யாழ்ப்பாணம்.
1997 - 07 - 25
(சி-1213)

---

## வடமராட்சி லயன்ஸ் கழகம்

எமது கழகத்தால் நடத்தப்பட்ட கண்சிகிச்சை முகாமில் கண் விழிப்படல சத்திரசிகிச்சை (Cataract Operation) செய்ய தெரிவு செய்யப்பட்டு இதுவரை சத்திரசிகிச்சை செய்யப்படாதோர்.
லயன் க. தணிகாசலம், நாவலர் மடம், நவிண்டில், கரவெட்டி எனும் விலாசத்தில் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

சிகிச்சைக்கான திகதி நேரில் அறிவிக்கப்படும், மிக விரைவில் எமது கழகத்தினால் மேற்கொள்ளப்பட இருக்கும் கண்சிகிச்சை முகாமில் கலந்து தங்கள் கண்களைப் பரிசோதிக்க விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை மேற்படி விலாசத்தில் அல்லது தலைவர்/செயலாளருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மேலும் பொதுமக்களின் அன்றாட சமூக தேவைகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு இலவச சமூக ஆலோசனை வழங்கும் விசேட கரும பீடம் ஒன்று எமது மந்திகையில் அமைந்துள்ள செயலகக் கட்டடத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 1.00 மணிவரை இயங்கும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| லயன் கே. பீ. ஆனந்தநடேசர் | லயன் ஆ. சிவசுவாமி |
| செயலாளர் | தலைவர் |
| கலட்டி ஒழுங்கை, | பிரதேச செயலகம், |
| புலோலி கிழக்கு, பருத்தித்துறை. | பருத்தித்துறை. |

(48646)

---

## நன்றி நவிலல்

சிவபதமடைந்த
### அமரர் செல்லையா கந்தசாமித்துரை
(கட்டியப்பா)

எமது தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்த சக வர்த்தகப் பெருமக்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனுதாபத்தந்திகள் அனுப்பிய யாவருக்கும் எமது நன்றிகள். மரணச் செய்திகளை அறிந்து தருவதில் உதவிகளைச் செய்த ரெலிகொம் நிறுவனத்தினர், மகாலக்ஷ்மி உரிமையாளர் மகேஸ்வரன், V. S. B Group பங்காளர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரவி அன்ராஜ் சில்க்ஸ்
க. ரகு
(உரிமையாளர்)

77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(48651)

# திருமலைக்கு வந்து தங்கியுள்ள அகதிகளுக்கு உணவுப் பிரச்சினை

## தரமானதாக இல்லை என முறைப்பாடு

கப்பல் வசதி இன்றி திருகோணமலையில் தவம்கிடக்கும் அகதிகளுக்கு தரமான உணவு வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு வந்து கப்பல் வசதியின்றி சுமார் 700 அகதிகள் தங்கி உள்ளனர்.

இவர்களுக்கு உணவு வழங்க புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நிதி வழங்கியுள்ள போதும், அந்த நிதி மூலம் உணவு வழங்க தனியார் சிலருக்கே "கொந்தராத்து" வழங்கப்பட்டுள்ளது.

இதேநேரம் — தங்க போதிய இடவசதி செய்து கொடுக்கப்படவில்லை என்றும் — போதிய குடிதண்ணீர் வழங்கப்படவில்லை என்றும் — அகதிகள் மேலும் தெரிவிக்கின்றனர். (இ-3)

# சுயதொழில் வேலை வாய்ப்புக்கு ப. நோ. கூ. ச. மூலம் போரூட் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்ட போரூட் அமைப்பின் உதவியுடன் சுய தொழில் வாய்ப்புக்கான திட்டங்களை ப. நோ. கூ. சங்கங்கள் மேற்கொள்ளவிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நிவாரணம் மற்றும் புனரமைப்புத் திட்டங்களைத் துரிதப்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

சிறிய அளவிலான விவசாயத்திட்டம், கால்நடை வளர்ப்பு, நாற்றுமேடைகள் அமைத்தல், விதைகளைச் சேமித்து வைத்தல், சிறிய கைத்தொழில் திட்டம் போன்றவற்றுக்கு ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக உதவ போரூட் அமைப்பு முன் வந்துள்ளது.

இது தொடர்பாக போரூட் அமைப்பு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல், நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

இச்சமாசம் தமது அங்கத்தவர்களான கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளது.

தத்தம் பகுதிகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்படும் திட்டங்களின் விவரங்களை அனுப்புமாறு சமாசம் கூட்டுறவுச் சங்கங்களைக் கோரியுள்ளது. (இ-3)

# கட்டடத் தேவைக்கான மணலை கப்பலில் எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம் ஜூலை 30

யாழ். மாவட்டத்தில் பாரிய கட்டட வேலைகளுக்குத் தேவையான ஆற்றுப் படுகை மணலை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டில் பாரிய கட்டட வேலைகள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

சிமெந்து, கட்டடப் பொருள்கள் ஆகியவற்றை எடுத்து வருவதில் இருந்த கட்டுப்பாடுகளால் யாழ். ஆஸ்பத்திரி, யாழ். பல்கலைக்கழகம் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்டு வந்த பாரிய கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்சமயம் சிமெந்து, மற்றும் கட்டடப் பொருள்களை எடுத்து வரக்கூடியதாக இருந்த போதிலும், பாரிய கட்டடங்களைக் கட்டுவதற்கான ஆற்றுப் படுகை மணல் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அந்த வகை மணலை எடுத்து வர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தவகை மணல் கண்டாவளைப் பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு முன்னர் எடுத்து வரப்பட்ட போதிலும், தற்சமயம் அப்பகுதியில் இருந்து எடுத்து வரமுடியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் — இந்த மணலுக்குப்பதிலாக கட்டடக் கலவையை மாற்றியமைக்கும் ஆய்வுகளுக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# நுண்கலைத் துறைக்கு இந்திய சங்கீதக் கருவி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைக்கு இந்திய தூதரகம் சங்கீதக் கருவிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையிடம் இக் கருவிகள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் ஒரு தொகுதி சங்கீதப் புத்தகங்களும் இந்திய தூதரகத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது.

"யாழ். மாவட்ட மாணவர்களின் மேற்படிப்புக்கு இந்தியா உதவிகளை வழங்கும். இந்திய புலமைப் பரிசில் திட்டத்தில் யாழ். மாணவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

"இந்த நிலையை நீக்கி கூடுதலான மாணவர்கள் இந்திய புலமைப் பரிசில் பெற முன்வர வேண்டும்" என்று இந்த கையளிப்பு வைபவத்தில் இந்தியத் தூதர் நரேஸ்தயாள் தெரிவித்தார். (இ-3)

# யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட வெற்றிடங்கள் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள வெற்றிடங்கள் மிக விரைவில் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் நிரப்பப்படவிருக்கின்றன.

யாழ். பல்கலைக் கழகத்துக்கு கடந்த வருடம் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு அனுமதி பெற்றவர்களில் பலர் இன்னமும் தமது பதிவுகளை மேற்கொள்ளவில்லை.

இதன் காரணமாக இவர்களின் இடங்களுக்கு புதியவர்களை தெரிவு செய்யும் பணி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெட்டுப்புள்ளி நிரலில் அடுத்த நிலையில் உள்ளவர்கள் இந்த வெற்றிடங்களுக்கு அனுமதிக்கப்படுவர். (இ-3)

## வணிகமன்ற சஞ்சிகை வெளியீடு

திருநெல்வேலி, ஜூலை30

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர்மன்றத்தின் "விருட்சம்" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வணிக மாணவர் மன்ற தலைவர் வே.வேல்நிதி தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் வாழ்த்துரையை கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்குவார். ஆசியுரையை துணைவேந்தர் பேராசிரியர். பொ. பாலசுந்தரம் பிள்ளை வழங்குவார். வெளியீட்டுரையை வணிகத்துறை தலைவர் க. தேவராஜா நிகழ்த்துவார். (இ-135)

## உதவிப்பணம்

கொழும்புத்துறைஜூலை30

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகள் தற்போது பிரதேசச் செயலக சமூக சேவைப் பிரிவினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-30)

## யுனிசெவ் நிதி உதவி

வட்டுக்கோட்டை ஜூலை30

தொல்புரம் விக்கினேஸ்வர சனசமூக நிலைய பாலர் பாடசாலை மாணவர்களின் பாவனைக்காக யுனிசெவ் நிறுவனம் புதிய மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்கியுள்ளது. (இ-12)

## காற்றினால் மீன்பிடி பாதிப்பு

செம்பியன்பற்று, ஜூலை 30

கடந்த சில நாள்களாக காலநிலை சீரற்று இருப்பதால் நாகர்கோயில், மாமுனை, தாளையடி மணல்காடு ஆகிய பகுதிகளில் கரைவலைதொழிலில் மட்டுமே மீனவர்கள் ஈடுபடுகின்றனர்.

இதனால் ஒரு கிலோ 60 ரூபா வரை விற்ற மீன் நாகர் கோயில், மணல்காடு சந்தைகளில் 120 ரூபாவில் இருந்து 140 ரூபா வரை விற்பனையாகிறது. (இ-36)

# வலி. வடக்கில் மீளக் குடியமர்வு

வலி - வடக்கு மக்களின் தொடர்ச்சியான கோரிக்கை காரணமாக அப் பிரதேசத்தின் குறித்த சில கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர வசதி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் பின் அப்பகுதி மக்கள் தம் வீடுகளைச் சென்று பார்த்து வரவும் வீடு, வளவு. கிணறுகளைத் துப்புரவு செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட பகுதி மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் இவ்வாறு அனுமதிக்கப்பட்டு இரு மாதங்களாகியும் அம்மக்கள் அவர்களின் வீடுகளில் குடியமர அனுமதிக்கப்படவில்லை இதனால் அதிக அளவு பணச்செலவு செய்து துப்புரவு வேலைகளை ஓரளவு நிறைவு செய்த மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

**வாசகர் திருமுகம்**

மீளக்குடியமர்த்த என தெரிவு செய்யப்பட்ட பதினொரு கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளை இயக்குவதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. உதாரணமாக அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் மைதானம் அமைந்திருந்த இடத்தினூடுசெல்லும் பாரிய இராணுவ மண் அணை, தடுப்புவேலிகள், மிதிவெடிகள், கண்ணிவெடிகள் ஏதும் அகற்றப்படவில்லை. அதற்குரிய நடவடிக்கைகளும் ஆரம்பமானதாகத் தெரியவில்லை.

அளவெட்டியினூடான சங்கானை - வல்லை வீதியும் பொதுமக்களின் பாவனைக்கென திறந்து விடப்படவில்லை. இதனால் அளவெட்டிக்குள் செல்வதற்கு மேலதிகமாக சுமார் 5 மைல்கள் கூடுதலாக பயணம் செய்து மல்லாகம் சந்தியினூடு செல்ல வேண்டியுள்ளது.

மல்லாகம் சந்தியில் மக்கள் தமது அடையாள அட்டைகளை ஒப்படைத்து விட்டு அங்கு கொடுக்கப்படும் இலக்கங்களை வாங்கிக் கொண்டு சிறைக் கைதிகள் போல் செல்ல வேண்டிய நிலை.

இத்தகைய தொந்தரவுகள் இப்பகுதி மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத்திரும்பவிடாது தடுக்கவல்ல எரிச்சலூட்டும் நடவடிக்கைகளே என்று மக்கள் கருத வேண்டியுள்ளது. வலி. வடக்கு மக்கள் எழுப்பும் கேள்விகளில் சில இவை:

இப்பகுதி மக்கள் எப்போது சுதந்திரமாக தமது வீடுகளில் குடியமர்ந்து வாழ அனுமதிக்கப்படுவார்கள்?

தம் சொந்தப் பாடசாலைகளில் கல்விகற்க எப்போது இப்பகுதி மாணவருக்கு வாய்ப்புக் கிடைக்கும்?

இப்பிரதேசத்தின் வளமான மண்ணில் — வயல்களிலும், தோட்டங்களிலும் — பயிர்ச்செய்கை செய்வதற்கு எப்போது அனுமதி கிடைக்கும்?

வலி - வடக்கில் மீளக்குடியமர்வு வேலைகள் விரைவில் ஆரம்பம் என்ற செய்திகளை எல்லாம் பார்த்துப் பார்த்து மக்கள் அலுத்துப் போய்விட்டார்கள். ஏமாந்து விட்டார்கள்.

இப்பகுதி மக்கள் எப்போது சுதந்திரமாக தமது வீடுகளில் குடியமர அனுமதிக்கப்படுவார்கள்?

இதற்கு திடமான உறுதியான பதிலை அரசிடமும் இவ்விடயம் சம்பந்தமான அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்தும் இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இப்பகுதி மக்களை ஏமாளிகளாக்காதீர்கள்: அது எவருக்கும் நல்லதல்ல.

வலி — வடக்கு மக்களையும் வாழவிடுங்கள்.

செ. சேரன்

அளவெட்டி.

# ஆங்கிலமும் அவசியமே

கடந்த 23 - 06 - 1997 (திங்கட்கிழமை) உதயன் வாசகர் திருமுகம் பகுதியில் பரிசளிப்பு விழா உரைகள் தமிழில் நிகழ்த்தப் பட வேண்டும் என்னும் தலையங்கத்தில் சா. ஆ. தர்மரத்தினம் என்ற வாசகர் எழுதியிருந்தார்.

இதில், தனியார் பாடசாலைகளின் முகாமை கொழும்பிலோ அல்லது வெளி நாட்டிலோ இருப்பதால் அதிபர்கள் ஆண்டு அறிக்கைகளை ஆங்கிலத்தில் அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது எனவும் குறிப்பிட்ட அவர் அதனை சுலபமாக நிவர்த்தி செய்ய தனது மூளைக்கு ஏற்றபடி வழியும் கூறியுள்ளார்.

ஏனைய பாடசாலைகள் போன்று தமிழில் நடத்தாமல் விழாக்களை வேற்று மொழியில் நடத்தினால் தாய் மொழியின் அந்தஸ்து குறைந்து தாழ்வு மனப்பான்மை ஏற்படும் என்று சொல்கிறார். இது விடயத்தில் தமிழ் மக்களின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளார்.

இவரால் குறிப்பிடப்படும் பெரும் பாடசாலைகள் எனப்படுவது, தனியார் பாடசாலைகள் எனக் கருதினால் இவை யாவும் கிறிஸ்தவப் பாடசாலைகளே இதில் யாழ். நகரில் பிரசித்தி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கொன்வென்ற் மகளிர் வித்தியாலயம் ஆகியனவும், உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி போன்றவைகள் என்றே கருதவேண்டி உள்ளது.

இந்தப் பாடசாலைகளில் கிறிஸ்தவப் பண்பாடுகள் காணப்படுகின்றன. இதனால் சிறந்த ஒழுக்கம் ஏற்படுவதற்கு, சில பிற மொழி பேசுபவர்களின் நல்ல கருத்துக்களையும் நல்லபழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது. இதனால் பிறமொழியாகிய ஆங்கிலத்தையும் தேவைக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்த வேண்டிய அவசியமும் இருக்கின்றது.

எமது சிறார்கள் ஆலயங்களுக்குச் சென்று தமக்கு விளங்காத சமஸ்கிருத மொழியில் இன்றும் பூஜைகளைக் காண்கிறார்கள். இதனால் தாழ்வு மனப்பான்மை என்ன வகையில் வந்து விட்டது?

பெரிய பாடசாலைகள் என்று தங்களால் கருதப்படும், தனியார் பாடசாலைகள் மூலம் கல்வி கற்ற பலர் இன்று சர்வதேச ரீதியாக பிரபல்யம் அடைந்த கல்விமான்களாய் இருப்பது எமது தமிழ் பேசும் மக்களுக்குப் பெருமையல்லவா?

அதற்கு ஆங்கிலப் புலமையே முக்கியமான காரணம் என்பதை நாம் வாசகரின் கவனத்துக்கு கொண்டுவர வேண்டும்.

பிழையான கருத்துக்களையும், குறுகிய எண்ணங்களையும் எமது மக்கள் மனதில் வளர்க்க எத்தனிக்கக் கூடாது. சிறந்த தனியார் பாடசாலைகளின் அதிபர்களையும், நிர்வாகிகளையும் உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும் என்பதே உண்மையாகும்.

சி. தேவராசா

தேவாலய வீதி, கொக்குவில் மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. உதவியுடன் 2ஆம் கட்டமாக

# 17 திட்டங்கள் அமுல் செய்யப்படும்

## யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்டத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மேற்கொள்ளவிருக்கும் 60 செயற்திட்டங்களில் 17 திட்டங்கள் கடந்த வாரம் இனங்காணப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டு உடனடியாக மேற்கொள்ள 17 திட்டங்கள் இனங்காணப்பட்டன.

ஏற்கனவே இனங்காணப்பட்ட 25 திட்டங்கள் தற்சமயம் செயற்பட்டு வருகின்றன.

ஏனைய திட்டங்கள் காலக்கிரமத்தில் செயலகத்தில் நடக்கும் கூட்டத்தில் இனங்காணப்படவிருக்கின்றன.

கடந்த வாரம் இனங்காணப்பட்ட 17 திட்டங்களும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரமும் வருமாறு:-

★ மிருசுவில் பொது நூலக திருத்தம்—ரூ 5 லட்சம்.

★ வரணி பொது நூலகத்துக்கு நூல்கள் வழங்கல் - ரூ. 50 ஆயிரம்.

★ சங்கானை முதலிகோயிலடி பகுதி குடிதண்ணீர் திட்டம் புனரமைப்பு—ரூ. 3 லட்சம்.

★ சங்கானையில் 4 பாலர் பாடசாலைகள் புனரமைப்பு —ரூ. 5 லட்சம்.

★ மாதகல் பொது குடிதண்ணீர் திட்டம்—ரூ 5 லட்சம்.

★ கட்டுடை குடிதண்ணீர் திட்டம்—ரூ. 5 லட்சம்.

★ புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி திருத்தம் ரூ. 2 லட்சம்.

★ இடைக்காடு சந்தை திருத்தல் —ரூ. 3 லட்சம்.

★ கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 பாலர் பாடசாலைகள் திருத்தல்—ரூ. 5 லட்சம்.

★ குப்ளான் விக்னேஸ்வரா ம. வி. திருத்தம்— ரூ. 5 லட்சம்.

★ யாழ். நகரில் ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், குருநகர் ச. சமூக நிலையங்களின் கட்டட திருத்தம்—ரூ. 4 லட்சம்.

★ குருநகர் படகு தயாரிப்பு நிலையம் திருத்தல்—ரூ. 5 லட்சம்.

★ நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதினொரு பொதுக்கிணறு திருத்தல் —ரூ. மூன்றரை லட்சம்.

★ கரவெட்டியில் பானை, சட்டி தொழிலை ஊக்குவித்தல்—ரூ. 4 லட்சம்.

★ கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 2 பாலர் பாடசாலைகள் திருத்தல்—ரூ. 5 லட்சம்.

★ தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க விற்பனை நிலையம் திருத்தல்—ரூ 5 லட்சம்.

★ அளவெட்டி ப.நோ.கூ. சங்க கிளைக் கட்டடம் திருத்தல்—ரூ. 2 லட்சம். (இ-3-5)

## நல்லூர்கந்தன் உற்சவம்

நல்லூர், ஜூலை 30

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறும் மஹோற்சவத்தில் முக்கிய உற்சவங்களின் விவரம் வருமாறு:

★ 17-8-97 மாலை 4 மணி —மஞ்சம்.

★ 24-8-97 — மாலை 4 மணி—கார்த்திகை உற்சவம்.

★ 27-8-97 — காலை 7 மணி — சந்தானகோபாலர் உற்சவம். அன்று மாலை 4.00 மணி—கைலாச வாகனம்.

★ 28-8-97—காலை 7 மணி —கஜவல்லி மஹாவல்லி உற்சவம். அன்று மாலை 4 மணி —வேல்விமான உற்சவம்.

★ 29-8-97 காலை 7 மணி —தண்டாயுதபாணி உற்சவம். அன்று மாலை 4 மணி —ஒருமுகத் திருவிழா.

★ 30-8-97 — மாலை 4 மணி—சப்பரம்.

★ 31-8-97—காலை 7 மணி —தேர் உற்சவம்.

★ 1-9-97—காலை 7 மணி —தீர்த்தம்.

★ 2-9-97—மாலை 4 மணி —பூங்காவனம் (இ-3 103)

## கப்பலில் தபாற் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இன்று புதன்கிழமை காங்கேசன்துறை வந்துசேரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பலில் 100 தபால் பொதிகளும் எடுத்துவரப்படுவதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

(இ-4)

## பாலர் பாடசாலை விளையாட்டு

வல்வெட்டித்துறைகணபதி படிப்பகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நெடியகாடு பிள்ளையார் கோயில் தெற்கு வீதியில் இடம்பெறும்.

கணபதி படிப்பக தலைவர் இ. தேவகுரு தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் பொ. கனகசபாபதி பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பரமேஸ்வரி பொன்னையா சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர். (இ-3)

## வவுனியா வளாகத்துக்கு விண்ணப்பம் கோரப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

1996 ஆம் ஆண்டு நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றியவர்களில் இருந்து யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன.

அண்மையில் உருவாக்கப்பட்ட இந்த வளாகத்தில் இவ்வாண்டு முதல் அனுமதிகள் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும்—

சகல பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதி கோரி விண்ணப்பங்கள் கோரப்படும் போது வவுனியா வளாகத்துக்கும் விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாகவும்—

இந்த வளாகத்தில் இரு பீடங்கள் இயங்கும் என்றும்—சுமார் 200 மாணவர்கள் இம்முறை அனுமதிக்கப்படலாம் என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் பராமரிப்பின்றி ஆலயங்கள்

செம்பியன்பற்று, ஜூலை 30

உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணிப் பகுதியில் உள்ள ஆலயங்கள் நீண்டகாலமாகப் பராமரிப்பின்றி உள்ளன.

அந்தாம் பனைபிள்ளையார் கோயில், வெட்டு முருகன் கோயில், கடற்கரைப் பிள்ளையார் கோயில், வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயம், புனித கப்பல் ஏந்திமாதா ஆலயம் என்பனவே பூசைகள் இடம்பெறாமல் இருந்து வருகின்றன.

இந்த ஆலயங்களை பராமரிக்க பொதுமக்கள் விரும்பினாலும் உடுத்துறைப் பகுதிக்கு அப்பால் முட்கம்பி வேலியிடப்பட்டு இருப்பதால் பொதுமக்கள் செல்ல முடியாத நிலைமை இருந்து வருகிறது. (இ-36)


### சேவை நலன் பாராட்டு

யா/ அராலி இந்துக் கல்லூரியில்
20 வருடங்களாக ஆசிரிய சேவையிலும் 8 வருடங்களாக
முதலாம் தர அதிபர் சேவையிலும்
சிறந்த சேவையாற்றி 29 - 07 - 97 இல் இளைப்பாறிய
**உயர்திரு. சதாசிவம் செல்வராசா**
அவர்களை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம்
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ அராலி இந்துக்கல்லூரி.

(48648)

### SHARE CERTIFICATES

Share Certificates of Nos: 558, B 1643 & C 971152 dated
31/03/1984,
20/05/1996,
17/03/1997.
belongs to Miss. A. Easwary of Kumarakoddam Kondavil North.
ISSUED BY:
**TOKYO CEMENT COMPANY (LANKA) LIMITED.**
had been lost while displacing from Kondavil. If any one come accross same, please notify to above address.

**Miss. A. Easwary**

(48656)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஆன் மேரி லூமினா இராஜகோபால்
அவர்களின் கணவரான
**திரு. பொன். இராஜகோபால்**
கொழும்பில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

புனித சாள்ஸ் ம.வி
யாழ்ப்பாணம்.

(48663)

### SHARE CERTIFICATES

Share Certificates of Nos: 557, B 1530 & C 971021 dated
31 / 03 / 1984,
20 / 05 / 1996,
17 / 03 / 1997.
belongs to A. Ariyathasan of Kumarakoddam, Kondavil North.
ISSUED BY:
**TOKYO CEMENT COMPANY (LANKA) LIMITED.**
had been lost while displacing from Kondavil. If any one come accross same, please notify above address.

**Mr. A. Ariyathasan**

(48655)

### கண்ணீர் அஞ்சலி

**சிற்றம்பலம் சந்திரன்**
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

சிற்றம்பலம் சந்திரன் அவர்கள் 26- 07 - 97 இல் காலமானதை அறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

அன்னாரின் இழப்புக் கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பேரிழப்பாகும்.

எமது கண்ணீர்ப் பூக்களை அவரின் பாதங்களுக்குக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,

வலிகாமம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

(48660)

### குழந்தை தத்தெடுத்தல்

2—4 வயதுக்குட்பட்ட பெண் குழந்தையை சட்டரீதியாகத் தத்துக் கொடுக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

இல .642,
மே/பா. "உதயன்"
யாழ்ப்பாணம்.

### உ

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"
பண்ணாகம்
**ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கம்**
பண்ணாகம், சுழிபுரம்.

மேற்படி சங்கத்தின் வெள்ளி விழா நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 26 - 07 - 1997 சனிக்கிழமை நடைபெற்றது. இதில் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்ட இலக்கங்கள் பின்வருமாறு:

முதலாம் பரிசு:- **8081**
இரண்டாம் பரிசு: **10743**
மூன்றாம் பரிசு: **314**

| ஆறுதல் பரிசுகள்: | | | |
|---|---|---|---|
| (1) | 1069 | (6) | 2815 |
| (2) | 4030 | (7) | 2913 |
| (3) | 2331 | (8) | 8974 |
| (4) | 986 | (9) | 6980 |
| (5) | 10460 | (10) | 3234 |

மேற்குறிப்பிட்ட இலக்கங்களுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் செயலாளருடன் தொடர்பு கொண்டு தமது பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நன்றி!

அ. குகதாசன்
தலைவர்

ப. அஜித்குமார்
கௌரவ செயலாளர்

(48660)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தபாற் சேவை

தபாற் சேவை மக்களுக்குரிய அத்தியாவசிய சேவைகளில் ஒன்று. எனினும் தபாற்சேவையை—அதனை இப்போது கையாளும் தபால் திணைக்களத்தை—கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

தபால் திணைக்களத்தை மறுசீரமைக்கப் போவதாகவே அரசு கூறுகிறது. மறுசீரமைப்பு என்பது தபாற் பகுதியை முதலில் கூட்டுத்தாபனமாக்கிப் பின்னர் தனியார் நிறுவனமாக்குவதே என்று அர்த்தம் கூறுகின்றனர் திணைக்கள ஊழியர்கள்.

தொலைத் தொடர்புத் திணைக்களத்தை தனியார் நிறுவனமாக்கியது போன்று தபால் திணைக்களத்தையும் தனியபர் நிறுவனமாக்குவதே அரசின் உள்ளார்ந்த நோக்கம் என்றும் அவர்கள் கருதுகின்றனர்;

தபாற் திணைக்களத்தை மறுசீரமைப்பது குறித்து அமைச்சர் மங்களச மரவீர, திணைக்களத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி விளக்கியதாகவும்—

உத்தேச மாற்றங்களைச் செய்வதற்கு. பெரும்பான்மையான தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்ததாகவும் —அரச தரப்பு அறிவிக்கிறது.

தபால் திணைக்களத்தைத் தனியார் மயப்படுத்த ஐக்கிய தேசியக்கட்சி அரசே திட்டம் வகுத்தது: அப்போது எதிரணியில் இருந்த இப்போதைய அரசியல்த் தலைவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அது மட்டுமன்றி, பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனியார் மயமாக்கப் படக் கூடிய துறைகள் குறித்துப் பிரஸ்தாபிக்கையில், தபால்துறை சேர்க்கப் படவில்லை என்பதனை விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதாவது தபால் துறையை தனியார் மயமாக்குவதற்கு மக்கள் ஆணை பெறப்படவில்லை. ஆனால் இப்போது அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மக்கள் ஆணையை மீறுவதாகும் எனவும், அது அரசின் சர்வாதிகாரப் போக்கைப் பிரதிபலிப்பதாகவும் கொள்ளப்படுகிறது.

தபாற் சேவையை சீரமைக்கும் போது ஊழியர்கள் நலன் பாதிக்கப்படமாட்டாது என்று அமைச்சர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

எனினும் தொலைத் தொடர்பு சேவை தனியார் மயமாக்கப்பட்டதால் ஊழியருக்கு உண்டான அனுபவங்களை மறக்க முடியாது என்பது தொழிற்சங்கங்களின் நிலையாகும்.

தனியார் மயக் கொள்கை, அதன் தீவிர அமுல் யாவும் உலக வங்கியின் அறிவுறுத்தல். அதனை மீறிச் செயற்படும் நிலையில் அரசு இல்லை.

தனியார் மயப்படுத்தலால் அரசின் நிதி வளம் பெருகும் என்று காரணம் கூறப்பட்டாலும், அதன் மூலம் நாட்டின் வளங்களும், மனித வளமும் அடகு வைக்கப்படுகின்றன. நீண்ட காலச் சுரண்டலுக்கு அத்திவாரமிடப் படுகிறது. எனினும் அந்தப் பொறிக்குள் விழாமல் தப்பக் கூடிய சக்தி இலங்கைக்கு (எந்த அரசிடமும்) இல்லையே!

## இடம் பெயர்ந்து வேறிடங்களில் இருந்தாலும்
# தமது சொந்த மாவட்டத்துக்குரிய வாக்காளர் பட்டியலில் பதியலாம்

கொழும்பு ஜூலை 30

வடக்குக்கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்போரும் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருப்போரும் தேர்தல் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்ய தேர்தல் ஆணையாளர் ஏற்பாடு செய்துள்ளார்.

கொழும்பிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்கள் தமது சொந்தத்தொகுதியில் வாக்களிக்க வசதியாக அவர்களின் பெயர் அவர்களது தொகுதி வேட்பாளர் பட்டியலில் பதிவு செய்யப்படும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மாவட்டத்திற்குரிய தேர்தல் தொகுதிப் பட்டியலிலேயே தமது பெயரைப் பதிவு செய்துகொள்ளலாம்.

வவுனியா, மன்னார், திருகோணமலை பகுதிகளிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்போரும் இதே நடைமுறையின் கீழ் தமது சொந்தத் தேர்தல் தொகுதி வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை பதிவு செய்யலாம்.

இடம் பெயர்ந்து 6 மாத காலத்திற்கு மேலாக தமது உற்றார். உறவினர், நண்பர் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் இதே நடைமுறையைப் பின்பற்றி தமது பெயர்களைத் தமது சொந்தத் தேர்தல் தொகுதி வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யலாம்.

அன்றேல் உறவினர்நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போர் அந்த உறவினர், நண்பர்களின் சம்மதத்துடன் தற்சமயம் தாங்கள் தங்கியிருக்கும் தேர்தல் தொகுதி வாக்காளர் இடாபிலும்தமது பெயரைப் பதியலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-3-10)

# இராணுவ அதிகாரிகள் பலருக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தளபதிகள் பலர் நாளை மறுதினம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்தவின் பணிப்புரையின் கீழ் இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 55 ஆவது படையணியின் பிரதித் தளபதியான பிரிகேடியர் நிஹால் மாறம்பே கிழக்கு மாகாணத்தின் 3 ஆவது பிரிவு படையணியின் தளபதியாகவும் —

கிழக்கு மாகாண 3 ஆம் பிரிவு படையணியின் தளபதி பிரிகேடியர் அன்ரன் விஜேந்திரா இராணுவப் பயிற்சிக் கல்லூரி கட்டளையிடும் தளபதியாகவும் —

புத்தளம் மாவட்ட 18 ஆம் பிரிவு படையணியின் தளபதி பிரிகேடியர் காமினி குணசேகர 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 55 ஆவது படையணியின் பிரதித் தளபதியாகவும் —

ஆனையிறவு செயற்பிரிவின் 2 ஆம் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர இராணுவ தலைமையக நலன்புரி தொடர்புப் பணிப்பாளராகவும் —

ஆனையிறவு செயற் பிரிவின் 2 ஆம் கட்டளை பிரதித் தளபதியான பிரிகேடியர் சரத் பொன்சேகா அந்தப் பிரிவின் 2 ஆம் கட்டளைத் தளபதியாகவும் —

மாற்றம் பெற்றுள்ளனர்.

(உ-150-3)

# இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 30

இந்திய மீனவர்கள் இலங்கைப் படையினரால் தாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு முன்பாக தமிழ் மாநில காங்கிரஸ் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

அ.தி.மு.க., ம.தி.மு.க., ஜனதாக் கட்சி ஆகியவை இணைந்து கடந்த திங்களன்று இதே தூதரகத்துக்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது தெரிந்ததே (உ-4)

# தடுப்புக் காவலில் மரணம்

தென்மராட்சி, ஜூலை 30

கடந்த மே 26 ஆம் திகதி தனங்களப்பு கடற்கரையில் படையினரால் கைது செய்யப்பட்டு, வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மறவன்புலோ வாசி மரணமாகிவிட்டதாக சாவகச்சேரி பொலீஸார் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மறவன்புலோவைச் சேர்ந்த கோபால் சண்முகம் (வயது 73) என்னும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய முன்னாள் அதிபரே மரணமானவராவார். (உ-117)

# இன்று வைத்தீஸ்வராக் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 30

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நிகழ்வையொட்டிய வைபவம் இன்று காலை 11-30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரி அதிபர் வி. சந்தோசம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் ''இலங்கையில் ஸ்ரீராமகிருஷ்ண இயக்கமும், வைத்தீஸ்வராக் கல்லூரியும்'' என்னும் தலைப்பில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா சிறப்புரையாற்றுவார்.

கல்லூரி இந்து மாணவர் மன்றம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

(உ-3)

# இந்தோனேஷியாவில் 22 இலங்கையர் கைது

கொழும்பு, ஜூலை 30

'விஸா' இன்றி சட்டவிரோமாக இந்தோனேஷியாவுக்குள் நுழைந்ததாகக் கூறப்படும் 22 இலங்கையர்கள் மேற்குத் தீமோர் நகரமான கொப்பாங்கில் வைத்து கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

படகு ஒன்றில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்த சமயம் இவர்கள் கைதானதாக இந்தோனேஷிய பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த 22 பேரில் 16 பேரிடம் மட்டுமே கடவுச்சீட்டுக்கள் காணப்பட்டன. ஏனைய அறுவரிடமும் பிரயாணப் பத்திரங்களோ அடையாளப் படுத்தும் ஆவணங்களோ இருக்கவில்லை.

இந்த 22 இலங்கையரும் இரு படகோட்டிகளுடன் ஒரு படகை அமர்த்தி, அதில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு மூவாயிரம் டொலர் பேசியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இவர்களை சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குக் கூட்டிச்செல்ல ஏற்பாடு செய்ததாகக் கூறப்படும் ஐந்து இந்தோனேஷியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்; மற்றும் சிலரை இந்தோனேஷியப் பொலீஸார் தேடிவருகின்றனர். (உ-4)

## குடாக்கடல் ஊடாக
# 40 பல்கலை. மாணவர் குருநகர் வந்தனர்

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் — பிறமாவட்டங்களைச் சேர்ந்த — நாற்பது மாணவர்கள் வள்ளங்களில் குடாக்கடல் ஊடாக குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களைச் சேர்ந்த மாணவர்களே கடந்த சனியன்று 26 பேரும், திங்களன்று 14 பேரும் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் அனைவரும் குருநகர் சீநோர் வலைத்தொழிற்சாலை அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(உ-51)

# கண்ணிவெடிகள் மீட்பு

டாங்கிகளைச் சேதமாக்கும் கண்ணிவெடிகள் மல்லாகத்தில் வைக்கப்பட்டிருப்பதாக நேற்று முன்தினம் முற்பகல் 10-30 மணியளவில் கிடைத்த தகவலை அடுத்து அந்தக் கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்—

இது பின்னர் இராணுவப் பொறியியல் பிரிவால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் —

'ரூபவாஹினி' அறிவித்தது. (உ-4)

# பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க புளொட் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

மாதக்கணக்கில் ஸ்தம்பிதம் அடைந்துள்ள குடாநாட்டுக்கான பயணிகள் கப்பல் சேவை மீளவும் ஆரம்பிக்க துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி(புளொட்) யாழ். அரச அதிபரிடம் கேட்டுள்ளது.

குடாநாட்டுக்கான பயணிகள் கப்பல் சேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளமை குறித்து அரச அதிபருக்கு புளொட் அமைப்பு கடிதம் ஒன்றை நேற்று அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ பிறமாவட்டங்களில் இருந்து தமது பெற்றோரை, உறவினர்களைப் பார்க்க யாழ்ப்பாணத்துக்கு வந்து கப்பல் வசதியின்றி இங்கு தங்கியுள்ள அரசதிணைக்கள ஊழியர்கள் கப்பல் சேவை நடைபெறும் வரை இங்குள்ள திணைக்களங்களில் அல்லது செயலகத்தில் கையொப்பம் இட அனுமதிக்க வேண்டும்.

★ நேர்முகப் பரீட்சைகளுக்கு சமுகமளிக்க முடியாது போனவர்கள் பிறிதொரு சந்தர்ப்பத்தில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ கப்பல் போக்குவரத்து தடைப்பட்டதை சாட்டாக வைத்து மக்களின் அத்தியாவசியப் பொருள்களை பதுக்கிவைத்து கறுப்புச் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதை இராணுவ அதிகாரிகள் கண்டு பிடித்து மக்களுக்கு நியாய விலையில் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்வது போன்று விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (இ-3)

## நாளை

**ஆடி 15**

வியாழக்கிழமை

திதி: துவாதசி

பிற்பகல் 12.12 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

முற்பகல் 9.45 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 7.33-9.03

[illegible]: 1.33-3.03

([illegible]

பழையநேரப்படி)

# வில்லூன்றியில் ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆடி அமாவாசையை ஒட்டி விசேட பெருவிழா வில்லூன்றி தீர்த்தக் கட்டடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று வில்லூன்றி விநாயகர் புனித தீர்த்தத்திற்கு எழுந்தருளுவார். காலை 8.15 இக்கு தீர்த்த வாரி நடைபெறும்.

பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் விசேவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

புனித தீர்த்தக் கேணி நாளை வியாழக்கிழமை இறைத்துத் துப்புரவு செய்யப்படவுள்ளது. கேணியில் விலை மதிப்புள்ள பொருள்களைத் தவறவிட்டவர்களை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளும்படி பரிபாலன சபை கேட்டுள்ளது. (உ)

# சேவை நலன் பாராட்டு விழா

இம்மாத நிறைவுடன் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறும் யாழ். கல்வித்திணைக்கள சேவைக்கால கல்வி ஆலோசகர் 'இறைபணிச் செம்மல்' ச. விநாயகரத்தினத்தின் சேவை நலன் பாராட்டு வைபவமும் பிரிவுபசாரமும் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் — ஒன்று ஒன்றியத்தினால் நடத்தப்படும் இந்நிகழ்ச்சியில் யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் க. இரத்தினராசா அலகு ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ. தாணையா சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அலுவலர் இலங்கையர் கனேசன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு பாராட்டுரை நிகழ்த்துவர்.

ஒன்றியத்தின் சார்பில் ச. விநாயகரத்தினத்துக்கு தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கப்படும் நிகழ்வும் இடம் பெறும். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மருந்தகங்களுக்கு தற்காலிக 'லைசென்ஸ்'

## புதிய திட்டம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30

சுகாதாரத் திணைக்களத்தில் பதிவுசெய்து அனுமதி பெற்றுக்கொள்ளாத யாழ். மாவட்ட ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களுக்கு தற்காலிக அனுமதி வழங்கும் புதிய திட்டமொன்றை யாழ். பிராந்திய பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடைமுறைப்படுத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ். பிராந்திய பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற — அனுமதி பெறாது வியாபாரம் மேற்கொள்ளும் மருந்து விற்பனையாளர்களுடனான கலந்துரையாடலின் போதே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

மருந்தாளர் பற்றாக்குறையை கவனத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள இப்புதிய திட்டத்தின் கீழ் —

மருந்தாளர் இன்றி - அனுமதி பெறாது — வியாபாரம் மேற்கொண்டு வரும் ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள் இரண்டு வாரங்களுக்குள் தற்காலிக அனுமதிக்காக யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும்.

விண்ணப்பம் செய்யும் ஆங்கில மருந்து விற்பனையாளருக்கு, ஆங்கில மருந்துகளைக் கையாள்வதில் அனுபவமிருக்கின்றதா என்பதை அறிவதற்கென பின்னர் ஒரு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்; அதில் அவர் தகுதி உடையவராக இருந்தால் மட்டுமே இத்தற்காலிக அனுமதி வழங்கப்படுமென்று யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள உணவு, மருந்து பரிசோதகர் திரு. மகாதேவன் தெரிவித்தார்.

அங்கீகாரம் பெற்ற மருந்தாளர் பற்றாக்குறையால் யாழ். நகரில் உள்ள பெரும்பாலான மருந்தகங்களில் அத்தகைய மருந்தாளர்கள் பணியில் இல்லை என்றும் —

இதனால் சுகாதாரத் திணைக்களத்தில் இந்த மருந்தகங்கள் பதிவுசெய்து அனுமதி பெறமுடியவில்லை என்பதும் தெரிந்ததையே.

(உ-15)

## லாலு எந்நேரமும் கைதாகலாம்

புதுடெல்லி, ஜூலை 30

கால்நடைத் தீவன ஊழல் தொடர்பான வழக்கில் பிஹார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் மத்திய புலனாய்வுத் துறையினரால் எந்தநேரத்திலும் கைது செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லாலு பிரசாத் யாதவின் முன் பிணைமனுவை பட்னா உயர் நீதி மன்றம் நிராகரித்தது. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இந்திய உச்ச நீதிமன்றத்தில் லாலு தாக்கல் செய்த மனுவும் நேற்று நிராகரிக்கப்பட்டது.

லாலுவை பிணையில் விடமுடியாத உத்தரவின் கீழ் கைது செய்யும்படி மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

(உ-10)

## பதவி வெற்றிடம்

இலங்கை நில அளவையாளர் சேவை III— தரம் II இற்கான வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான அறிவித்தல் கடந்த 4ஆம் திகதி வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 17-7-97 எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இந்தத் திகதி பிற்போடப்படலாம் என வடக்கு கிழக்கு மாகாண பிரதி நில அளவை அதிபதி தெரிவித்துள்ளார்.

(உ)

### மன்னார்..

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் முதலில் நடந்த பேச்சுக்களில் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. கடந்த சனிக்கிழமையும் அவர்களுடன் தொடர்பு கொண்டு எமது நிலைப்பாடு தொடர்பாக நினைவு படுத்தினோம். தொடர்ந்தும் புலிகளுடன் தொடர்பு கொண்டு எமது நிலைப்பாடு தொடர்பாக வலியுறுத்த விருக்கிறோம்.

"அவர்களிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளோம்" — என்றார்.


## முகாமையாளர் தேவை

கணக்கியல் துறையில் அனுபவத்துடன் வயது 50 — 60 வயதெல்லையில் உள்ளவர்கள் நேரிலோ கடித மூலமோ விண்ணப்பிக்கவும்.

டில்கா பேணிச்சர் பலஸ்

(SIVAN CORNER)

441, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

(48669)

மனஒளி

பிரச்சினைகள்

உளவளத்துணை உளச்சிகிச்சை

உளமுதல்உதவி

ஆக்கச்சிந்தனை

இரண்டாவது இதழ் வெளிவந்து விட்டது.

6-8-97 க்கு முன்னர் இவ்விதழ் கிடைக்கப்பெறாத சந்தாதாரர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சாந்திகம் (சி/1220)


# அரச கருமமொழி அமுலாக்கலை கவனிக்க நிறைவேற்று அலுவலர்

## அரச திணைக்களங்களில் நியமனம்

கொழும்பு ஜூலை, 30

அரச கருமமொழி அமுலாக்கலை கண்காணிக்க சகல அரச திணைக்களங்களிலும் பிரதம நிறைவேற்று அலுவலர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில், சகல அரச திணைக்களங்களிலும் அரச கரும மொழி அமுலாக்கல் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதம நிறைவேற்று அலுவலர்கள் அரச கரும மொழி அமுலாக்கலுக்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வர்; அத்துடன் முறையாக அமுலாக்கம் செய்யப்படுகிறதா என்பது குறித்து கண்காணிப்புப் பணிகளையும் செய்வர்.

இந்தப் பணிக்குத் தேவையான ஆலோசனைகளை அவர்கள் அரச கரும மொழி திணைக்களத்திடம் இருந்து பெறுவார்கள்.

## புதிய மண்டபம் திறப்பு

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய பங்கு மக்களால் இரண்டு இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தேவாலய முன் மண்டபம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பங்குத் தந்தை அருட்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளால் திறந்து வைக்கப்படவுள்ளது.

(உ 117)

## புதிய ஆசிரியர்கள் நியமனம்

கொழும்பு. ஜூலை 30

மேல் மாகாணம், வடமத்திய, வடக்கு—கிழக்கு மாகாணங்களுக்கு புதிதாக 2 ஆயிரத்து எழுநூற்று எண்பது ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாகாணங்களில் தற்போது நிலவிவரும் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டே புதிதாக ஆசிரியர்கள் சேர்க்கப்படவுள்ளனர் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

(உ-10)

## இலங்கையில் கொலராவா?

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் கொலரா நோய் பரவி வருவதாகச் சில ரஷ்யப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை செல்லும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளையும் அந்தப் பத்திரிகைகள் எச்சரித்துள்ளன.

ஆனால் இலங்கைச் சுகாதார அமைச்சு கொலரா என்பது வெறும் வதந்தி எனக் குறிப்பிட்டு ரஷ்யப்பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை மறுத்துள்ளன.

(உ-10)

## சிங்கள விவசாயிகள் சுடப்பட்டனர்

மட்டக்களப்பு, ஜூலை 30

வெலிக்கந்தைப் பகுதியில் உள்ள காட்டிற்கு வேட்டையாடச் சென்ற இரு சிங்கள விவசாயிகள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு பின்னர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதனால் அவர்களில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றவர் பலத்த சூட்டுக்காயங்களுடன் வெலிக்கந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

விவசாயிகள் வேட்டையாட எடுத்துச் சென்ற துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன.

(உ-10-21)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

படையினரின் சோதனையின் போது அந்தச் சிறுவர்கள் தங்களுடன் வரும் கிழவிகளைத் தங்களது தாயார் அல்லது மாமியார் எனத் தெரிவிப்பதாகவும் படையினருக்குத் தெரிய வந்துள்ளதாக [illegible] தெரிவிக்கிறது.

## பருத்தித்துறை லொறி கட்டணத்தில் மோசடியாம்!

கொழும்பு, ஜூலை 30

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் சென்ற லொறிகளுக்கு கட்டணம் வழங்குவதிலும் —

அகதிகளுக்கு உணவு நிவாரணம் வழங்குவதிலும் —

இதுவரை காலமும் புலிகள் மோசடி செய்து வந்துள்ளதாக இரகசியப் பொலீஸார் கண்டு பிடித்திருக்கின்றனர் என்று இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

யாழ். மாவட்டத்தில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள அரசாங்க அதிகாரிகள் இத்தகைய மோசடிகளை ஏற்பாடு செய்ததாக இரகசியப் பொலீஸார் தெரிவிப்பதாகவும் இலங்கை வானொலி குறிப்பிட்டது.

(உ-3)

## சித்திரப் போட்டிகள்

தென்மராட்சி, ஜூலை 30

இலங்கை வங்கி தேசியரீதியிலும் மாவட்டரீதியிலும் மாணவரிடையேயான சித்திரப்போட்டியை நடத்தவுள்ளது.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 6 வரை பிரிவு I இலும்—

ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 9 வரை பிரிவு II இலும்—

ஆண்டு 10 தொடக்கம் ஆண்டு 13 வரை பிரிவு III இலும்—

இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

இப்போட்டிகளில் இலங்கை வங்கி ஊழியர்களின் பிள்ளைகள் கலந்து கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் அந்தந்தப் பிரிவு இலங்கை வங்கிக் கிளைகளில் பெற்று பாடசாலை அதிபர்களின் சிபார்சுடன் அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-117)

## அடி சரியாக ராஜீவுக்கு விழாததே எனது கவலை

### தாக்கியவர் கூறுகின்றார்

கொழும்பு. ஜூலை 30

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட 1987 ஆம் ஆண்டு கொழும்பு வந்த அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை துப்பாக்கியால் அடித்துக் கொல்ல முயன்ற கடற்படை வீரர் விஜயமுனி றோஹண டி சில்வா தான் செய்த செயலுக்காக வருத்தப்படவில்லை என்றும் இனிமேல் வருத்தப்படப் போவதுமில்லை எனறும் அடி சரியாக விழவில்லையே என்பதுதான் தனது கவலை என்றும் நேற்றுப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

1987 ஜூலை 29ஆம் திகதி இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. அடுத்த நாள் நடைபெற்ற இராணுவ மரியாதையின் போதே விஜயமுனி துப்பாக்கியால் அடித்து ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய முயன்றார்.

அவர் செய்த குற்றத்திற்காக இராணுவ நீதிமன்றம் அவருக்கு 6 ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது. ஆனால் பின்னர் இலங்கை அரசு அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தது.

அவர் தாக்குதல் நடத்தி இன்றுடன் பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. (உ-4-10)

## கண்ணாடிகள் விநியோகம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த மாதம் நடத்தப்பட்ட கண்சிகிச்சை முகாம்களில் கண்ணாடி பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட முப்பது பேருக்கு இலவசமாக கண்ணாடி வழங்கும் வைபவம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் தலைவர் லயன் வி.விஜயகுமார் தலைமையில் நடைபெறும்.

இவ்வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகபௌதிகவியல் பேராசிரியர் க. கந்தசாமி கலந்து கொள்வார்.

சாவகச்சேரிப் பகுதியில் விரைவில் கண் சிகிச்சை முகாம் நடத்தவுள்ளதால் இச் சிகிச்சை முகாமில் கலந்து கொள்ளவுள்ளோர் சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள விமலாஸ் நிறுவனத்தில் தமது பெயரைப் பதிவு செய்து கொள்ளுமாறு கழகச் செயலாளர் க. ஜீவகதாஸ் அறிவித்துள்ளார்.

(உ-117)

## கம்போடியா அரசு மீது சிஹானூக் கண்டனம்

கம்போடியாவில் தற்பொழுது இடம்பெற்று வரும் அரசியல் நிகழ்வுகளை கம்போடிய மன்னர் நொரடோம் சிஹானூக் கண்டித்துள்ளார்.

நொரடோம் சிஹானூக் தற்போது சீனாவில் தங்கி உள்ளார்.

கம்போடியாவின் முதலாவது பிரதமர் நொரடோம் றணரித் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரது இடத்துக்கு வெளிநாட்டு அமைச்சர் நியமிக்கப்பட்டதையும் சிஹானூக் கண்டித்துள்ளார்.

ஹுன்சென்னால் பதவி நீக்கம் செய்யப்பட்ட முதலாவது பிரதமர் றணரித் சிஹானூக்கின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org